2000 மே 11]

590—

மேம்பாலம்

***13299—திரு. கு. மனோகரன்:**

மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி தொகுதி, அதியமான்கோட்டை அருகே N.H. 7 தேசிய நெடுஞ்சாலையின் குறுக்கே செல்லும் இரயில் பாதையில் மேம்பாலம் கட்டும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): ஆம். இதற்கான செயற்குறிப்பு மைய அரசிற்கு அனுப்பப்பட்டுள்ளது.

திரு. கு. மனோகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தருமபுரி, சேலம் தேசிய நெடுஞ்சாலையிலே அதியமான்கோட்டை அருகேயுள்ள அந்த இரயில்வே மேம்பாலம் மிக மிக அவசியமானது என்பதைக் கருதி, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மத்திய அரசுக்கு செயற்குறிப்பு அனுப்பப்பட்டிருப்பதாகத் தெரிவித்தார்கள். அதற்கு நன்றி. அதற்குண்டான அனுமதி கிடைத்துவிட்டதா? அந்தத் திட்டம் எத்தனை கோடியில் உருவாகவிருக்கிறது? விரைவில் டெண்டர் விடப்படுமா? வேலைகளை இந்த ஆண்டு தொடங்க அரசு உரிய நடவடிக்கை எடுக்குமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதியமான்கோட்டை அருகே இரயில்வே மேம்பாலம் கட்டுவதற்கு 10 கோடி ரூபாயில் ஒரு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு மத்திய அரசுக்கு அனுப்பப்பட்டது. அதற்கிடையில் மாண்புமிகு பாரதப் பிரதமர் திரு. வாஜ்பாய் அவர்கள் வடக்கு, தெற்கு, கிழக்கு, மேற்குப் பகுதிகளை இணைக்கக்கூடிய ஒரு மிகப் பெரிய நெடுஞ்சாலைத் திட்டத்தை அறிவித்தார்கள். அதிலே வடக்கையும், தெற்கையும் இணைக்கக்கூடிய அந்தச் சாலைத் திட்டத்தில் இந்தப் பகுதியும் வருகின்றது. எனவே இது குறித்து மறுபடியும் ஆய்வு

செய்வதற்கு ஆணையிடப்பட்டது. அதற்குப் பிறகு இந்தச் சாலை, தேசிய நெடுஞ்சாலை 7, தேசிய நெடுஞ்சாலை ஆணைக் குழுமம் (National Highways Authority of India) என்ற நிறுவனத்திடம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. அந்த நிறுவனத்தின் மூலம் இப்போது L & T RAMBOL என்ற நிறுவனத்தினிடத்திலே ஆய்வு செய்வதற்காக ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. ஆய்வு நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. இந்தத் திட்டம் முழுமையாக நிறைவேறும் என்பதை மாண்புமிகு மத்திய தரைவழிப் போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் நேற்றுகூட நாடாளுமன்றத்திலே அறிவித்திருக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 591, திரு. மா. இராமச்சந்திரன், மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்.

591—

சாலையைச் செப்பனிடுதல்

***28722**—**திரு. மா. இராமச்சந்திரன்:**

மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருவோணம் ஒன்றியம், ஒரத்தநாடு உட்கோட்டம், ஊரணிபுரம்-அண்ணாபுரம் சாலை மிகவும் பழுதடைந்துள்ளதைச் செப்பனிட்டுத் தர அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

வினாவில் குறிப்பிட்டுள்ள சாலையில் ஏற்படும் நொடிகளை அவ்வப்பொழுது சீர்செய்து, போக்குவரத்திற்கு ஏற்றவாறு பராமரிக்கப்பட்டு வருகிறது.

திரு. மா. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஊரணிபுரத்திலிருந்து தென்கரை வரை, அண்ணாபுரம் வரை செல்கிற சாலை 12 கிலோ மீட்டர் தூரம் இருக்கிறது. அது மிகவும் பழுதாகி இருக்கிறது. அவ்வப்போது செப்பனிடப்படுகிறதெனினும், மழைக்காலம் வருகின்றபோது அவை மறுபடியும் பழுதாகிவிடுகின்றன. அதேபோல, ஒரத்தநாடு உபகோட்டம் என்பது 380 கிலோ மீட்டர் கொண்டிருக்கிற பெரிய உபகோட்டமாக இருக்கிறது. ஒவ்வொரு